# இஸ்ரவேலர்களின் வரலாறு பாடம் - 3

## (இஸ்ரவேல் தேசத்தின் சிறப்பம்சம்)

### <u>இஸ்ரவேல் என்கிற பெயரின் அர்த்தம்</u>

'இஸ்ரவேல்' என்ற பெயரை எபிரெய மொழியில் எழுதும்போது, அதனுடைய முதல் எழுத்து (yisra'el) யோட்(') என்பதாகும். இஸ்ரவேல் என்பதின் எபிரெய வார்த்தைக்குரிய ஒவ்வொரு எழுத்தின் விளக்கங்களை நாம் அறிந்துகொள்வோமானால் அது நமக்கு பிரயோஜனமாக இருக்கும். ஆனால் நாம் இப்பொழுது இஸ்ரவேல் என்பதின் எபிரெய வார்த்தைக்குரிய முதல் எழுத்தை மட்டும் கற்றுக்கொள்ளப்போகிறோம். "யோட் (')" என்பதே இஸ்ரவேல் என்பதின் எபிரெய வார்த்தைக்குரிய முதல் எழுத்து. இதற்குரிய அர்த்தம் என்ன? வார்த்தையின் முதல் எழுத்தில் வருகிறவர் மனிதனாய் வந்த இயேசுகிறிஸ்து. நாம் அறிந்திருக்கிற இந்த இஸ்ரவேல் என்கிற பெயர் யாக்கோபுக்குத்தான் கொடுக்கப்பட்டதென்று. இயேசுகிறிஸ்து வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இப்பெயர் யாக்கோபுக்கு கொடுக்கப்பட்டது. இஸ்ரவேல் என்கிற தேசத்தை தேவன் உருவாக்க தொடங்கிய மூன்றாம் தலைமுறையில் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த பெயருக்குள் இன்னும் விசேஷமாக முதல் எழுத்திலேயே இயேசுகிறிஸ்து கூறப்பட்டுள்ளார், இயேசுகிறிஸ்துதான் முதலாவதாக வந்திருக்கிறார்.

இஸ்ரவேல் என்ற பெயருக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. 1. தேவனோடு போராடுகிறவன் 2. தேவனுடைய இளவரசன். யாக்கோபு தேவனோடு போராடினதினால் அந்த (yisra'el), இஸ்ரவேல் என்கிற பெயர் வந்தது.

இஸ்ரவேல் என்கிற வார்த்தையில், இந்த பெயரில் கூறப்பட்டுள்ள தீர்க்தரிசனத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும. எபிரெய மொழியிலே "Yis" என்றால் "அவன்" அல்லது "மனிதன்" என்ற பொருளை காணமுடிகிறது. இதை எழுதும்போது – ஆலெப், யோட், சாயீன் என்று எழுதுவார்கள். சில சமயங்களில் ஆலெப் என்கிற எழுத்து வராமல் யோட் மற்றும் ஷுன் ஆகிய இந்த இரண்டு எழுத்துக்கள் மட்டும் வந்தால் அது மனிதனை (Yis) குறிக்கும். ஆக முதல் இரண்டு எழுத்துக்குரிய பொருள் மனிதன் என்பதாகும். கடைசி இரண்டு எழுத்து "EL" என்பதின் பொருள் "தேவன்" என்பதாகும். முதல் இரண்டு எழுத்துக்களும் மனிதன், கடைசி இரண்டு எழுத்துக்களும் தேவன், இவைகளுக்கு இடையில் வருகிறதான ஒரு எழுத்து "ரேஷ்" என்கிற எபிரெய எழுத்தின் பொருள் பரிசுத்த ஆவியானவர்.

**<u>தீர்க்கதரிசனம்</u>**

இஸ்ரவேல் என்கிற பெயருக்குள்ளே இருக்கின்ற தீர்க்கதரிசனம் என்ன? பழைய ஏற்பாட்டிலே யாக்கோபுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டிலே யூதர்களுக்கு கொடுக்கப்பட்டது, ஆனால் அதிலே மறைந்திருக்கிறது புதிய ஏற்பாட்டிற்குரிய தீர்க்கதரிசனம். "நீங்கள் மாத்திரமே என்னால், எனக்காக தெரிந்துகொள்ளப்பட்ட ஜனம்" – "இஸ்ரவேல்" என்று நானே உங்களுடைய பெயரை மாற்றுகிறேன். (யாக்கோபு என்ற பெயரை இஸ்ரவேல் என்று மாற்றுதல்).

ஆனால் குறிப்பிட்ட நாளிலே முதல் இரண்டு எழுத்துக்களைக் குறிக்கிற இயேசுகிறிஸ்து வரப்போகிறார். இதிலே அலெப் (தேவன்) பூஜ்ஜியமாக மாறி இந்த பூமியிலே வந்து மரிக்கப்போகிறார். இவ்விதமாக மரித்து உயிர்த்தெழும்போது இந்த கிருபையின் கதவு உலகத்திலுள்ள அனைவருக்காகவும் திறக்கப்படும். பின்பு இயேசுகிறிஸ்து மேலே பரமேறினப் பிற்பாடு அவர் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார். பரிசுத்த ஆவியானவர் வந்து இஸ்ரவேலரை மாத்திரமல்ல, யார், யாரெல்லாம் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுடைய சரீரங்களை தான் வாசம்பண்ணுகிற ஆலயமாக (1 கொரிந்தியர் 6:19) கொண்டு மனிதனையும் தேவனையும் இணைக்கும் பாலமாக அமைவார். இதுதான் இஸ்ரவேல் பெயரிலுள்ள தீர்க்கதரிசனம்.

**ரோமர் 8:26** - அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.

இஸ்ரவேல் என்ற பெயரிலே தேவன் வெளிப்படுத்தியுள்ள தீர்க்கதரிசனத்திலே நம்மையும் இணைத்துள்ளார். தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரோடு நம்முடனே தொடர்புபடுகிறார். நாம் தேவனை நோக்கி பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுகிறோம்.

இஸ்ரவேல் என்கிற பெயரிலே தேவன் வெளிப்படுத்தியுள்ள இந்த மகிமையான தீர்க்கதரிசனத்திற்காக தேவனை நாம் அதிகமாக மகிமைப்படுத்த வேண்டும். **ஆதியாகமம் 12:1-3** - கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

நோவாவின் நாட்களில் நடைபெற்ற ஜலபிரளயத்திற்கு பின்பு, நோவாவின் சந்ததியிலே வந்த மூன்று பேரில் ஒருவனாகிய ''காம்'' மிகவும் கேவலமானவன். காமின் சந்ததியிலே வந்தவன் கூஷ், இவனுடைய சந்ததியில் வந்தவன் ''கில்காமேஸ்'', வேதத்திலே அவனுடைய பட்டப்பெயர் ''நிம்ரோத்'' என்பதாக எழுதப்பட்டுள்ளது.

நிம்ரோத், நல்ல வேட்டைக்காரன், இவன் பூமியிலே பராக்கிரமசாலியானான் என்று வாசிக்கின்றோம். இவன், நோவாவுக்கு தேவன் கொடுத்த கட்டளைக்கு கீழ்படியாமல் போகின்றான். ஆதியாகமத்திலே இதற்கான விளக்கங்களை தெளிவுபட நம்மால் காணமுடியவில்லை. உலக சரித்திரங்களைப் பற்றி படிக்கின்றபொழுது இவைகளை அறிந்துகொள்ள முடிகிறது. ஆபிரகாம் வந்ததான கல்தேயர் பட்டணமாகிய ஊர் என்கிற பட்டணத்தில்தான் உலகத்திலேயே மிக பழமையான நூல்நிலையம் (Library) இருக்கின்றது. அங்கே இருக்கின்றவைகள் புத்தக வடிவிலே இல்லை, கல்வெட்டுகளிலும், மண்பாண்டங்களிலும்தான் அந்த எழுத்துக்கள் இருக்கின்றன. இவைகளெல்லாம் ''அக்காடியன்'' என்று சொல்லப்படுகின்ற மொழியிலே பொறிக்கப்பட்டுள்ளன. அக்காடியன் மொழியைக் கற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு இஸ்ரவேலிலே சென்று, அங்கே உட்கார்ந்து கற்றுக்கொண்டதினாலே, இவைகளைத் தெளிவாக கூறமுடிகிறது.

ஊர் என்கிற பகுதியிலுள்ள பழமையான அந்த நூல் நிலையத்தில் ஆய்வுசெய்து ஆய்வுகளிலிருந்து கண்டுகொண்ட விஷயங்கள் என்னவென்றால் நிம்ரோத் கட்டின பாபேல் கோபுரம் சம்பந்தமான விஷயங்கள். பாபேல் என்றால் ''தேவனை அடையக்கூடிய வாசல்'' என்கிற பெயரிலே பாபேல் கோபுரத்தை கட்டினார் இந்த நிம்ரோத். பிசாசு, பிசாசாக மாறுவதற்கு முன்பு பிரதான தூதனாக பரலோகத்தில் இருந்தவன். ஆகவே அவனுக்கு பரலோகத்தின் இரகசியங்கள் சில தெரியும். தேவனுடைய சில செயல்பாடுகள் அவனுக்குத் தெரியும். தேவன், சில விஷயங்களை அவசரமில்லாமல் சரியான நேரத்திலே வெளிப்படுத்துவார் என்பதும் தெரியும். ஆனா் பிசாசின் புத்திகளில் ஒன்று நம்முடைய தேவன் உண்மையானவைகளை வெளிப்படுத்துவதற்கு முன், போலியானவைகளை அறிமுகப்படுத்துவது, பாபேல் கோபுரம் கட்டப்படுகின்ற நேரத்தில் இருந்தவர்கள் அனைவருக்கும் நோவாவின் காலத்தில் தேவனே செய்த அந்த ஜலபிரளயத்தின் செயல்பாடுகள் அனைத்தும் தெரியும். ஆனால் மோசே உண்மையான இந்த ஜலபிரளயத்தைக் குறித்து, எழுதுவதற்கு முன்பே, தேவனுடைய உண்மையானதை

அபத்தமாக்கும் வண்ணமாய் உலகளாவிய ஜலப்பிரளயம் வரும் என்பதாக போலியான நிலையிலே எழுதுவதற்கு பிசாசானவான் சிலரை எழுப்பினான் என்பதை அறிய முடிகிறது. ஆகவேதான் சில வேதபண்டிதர்கள், இந்த ஜலபிரளயத்தை குறித்ததான விஷயங்களை ஏனைய ஏடுகளிலிருந்து எடுத்து மோசே எழுதியுள்ளார் என்று கூறுகிறார்கள். இவர்கள் மொக்கு வேத பண்டிதர்கள்.

இயேசுகிறிஸ்து மனுக்குலத்தின் மீட்புக்காக உலகத்திலே வருவார் என்பது ஆதியாகமம் 3:15க்கு முன்பு ஆதியாகமம் 1:1 லேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை ஆராய்ச்சியின் மூலமாக கண்டுகொள்கிற நமக்கே தெரிய வருமானால், பரலோகத்திலே இருந்து கீழே தள்ளப்பட்ட பிசாசுக்கு இதைப் பற்றியதான அறிவு எவ்வளவாய் இருந்திருக்கும். பிசாசுக்கு இயேசுகிறிஸ்து எவ்விதமாய் வருவார், என்னென்ன விதங்களிலெல்லாம் கிரியை செய்வார் என்பதெல்லாம் நன்கு தெரியும். ஆகவே, இவ்விதமாய் மனிதனாக உலகில் வருகின்ற இயேசுகிறிஸ்து மனுகுலத்திற்கான மீட்பிற்காக வாசலாக இருப்பார் என்பதும் பிசாசுக்கு நன்கு தெரிந்திருக்க கூடும். ‘‘நானே வாசல்’’ என்று இயேசுகிறிஸ்து கூறுவார் என்று அவனால் யூகித்திருக்க முடியும். ஆகவே உண்மையான வாசலானவர் வந்து நானே வாசல், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன் என்று கூறுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பாபேல் கோபுரத்தின் மூலமாக ஒரு போலியான வாசலை கொடுக்க முற்பட்டானே, அப்படியென்றால் பிசாசு பெரிய கள்ளன். பிசாசு எந்த இடத்தில் இந்த பாபேல் கோபுரத்தைக் கட்ட முற்பட்டானோ அதே இடத்திலிருந்துதான் தேவன் ஆபிரகாமை அழைத்தார். ஆபிரகாம் அழைக்கப்பட்டபோது அவரது பெயர் ஆபிராம் என்பதாகும். பிற்பாடுதான் ஆபிரகாம் என்று உயர்த்தப்பட்ட தகப்பனாக ஆசீர்வதிக்கப்பட்டார்.

ஆபிரகாமை அழைத்த தேவன் அவரை எந்த தேசத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமோ அதை முன்கூட்டியே தெரிவு செய்துவிட்டார். ‘‘நான் காண்பிக்கும் தேசத்துக்குப் போ’’ – நான் ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிற தேசம் இருக்கிறது, இப்போது உனக்கு அது தெரியாமல் இருக்கலாம், ஆனால் புறப்பட்டு போ, நான் உனக்கு காண்பிப்பேன். ஆபிரகாம் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்து புறப்பட்டு சென்ற பிற்பாடு அநேக காலங்களுக்கு பின்பு அவனுடைய பெயரில் மாற்றம் கொண்டு வருகிறார். ஏற்கனவே இருக்கின்ற பெயரிலே ஒன்றையும் குறைக்காமல், ‘‘ஏலோஹிம்’’ என்கிற தேவனைக் குறிக்கிற பெயரின் இடையிலே ‘‘ஹே’’ என்ற எழுத்து வருகிறது. ‘‘ஹே’’ என்பது தேவனுடைய வல்லமையைக் குறிக்கின்றது. ‘‘ஹே’’ என்ற எழுத்தை உள்ளேயிருந்து, வெளிசுவாசத்தின்போதுதான் ஊத முடியும். எபிரெய எழுத்துகளுக்கு இலக்கம் இருக்கின்றது.

1. ஆலெப்
2. பேத்
3. கிமெல்
4. டாலெத்
5. ‘‘ஹே’’

‘‘ஹே’’ என்பதனைக் குறிக்கிற வார்த்தைகள்: 1. தேவன், 2. பிரிவு 3. உயிர்த்தெழுதல் 4. இயேசு 5. தேவவல்லமை.

தேவனுடைய வல்லமை தேவனுக்குள்ளிருந்து சுவாசமாக வருகின்றது. தேவன் மனுஷனை உண்டாக்கும்போது, அவனை மண்ணினாலே உண்டாக்கிவிட்டு, அவனுடைய நாசியிலேதான் சுவாசத்தை ஊதினார் (‘‘ஹே’’ செய்தார்).

மனிதன் ஜீவனுள்ள ஆததுமாவாக வருவதற்கு ‘‘ஹே’’ என்ற அந்த தேவனுடைய வல்லமைதான் காரணம். அதுபோல, 2 தீமோ்ாததேயு 3:16ல் பவுலடியார் மூலம் தேவ ஆவியானவர் இவ்விதமாக கூறுகின்றார், வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினாலே அருளப்பட்டிருக்கின்றது என்று. இதிலே இரண்டு கிரேக்க சொற்களின் சேர்க்கையான ஒரு சொல்லை நாம் பார்க்க முடிகிறது. அது அருளப்பட்டிருக்கிறது என்கிற ஒரு சொல், இதற்கான இரண்டு சொற்கள் 1. தேவன் + 2. வெளிசுவாசம் = தேவனுடைய வெளிசுவாசம். ஆகவே, ‘‘ஹே’’ என்கிற நிலையிலேதான் தேவன் தம்முடைய வார்த்தைகளை நமக்குத் தந்திருக்கின்றார். மேலே குறிப்பிட்டு சொன்ன இத்தனைவிதமான காரியங்களுக்கும் காரணம் என்ன? ஆபிராம், ஆபிரகாம் என்ற தேவனால் பெயர் மாற்றம் செய்யப்படுகையில் அவனுடைய பெயரின் இடையிலே ‘‘ஹே’’ யை தேவன் சேர்த்திருக்கிறார் என்பதனை நாம் புரிந்துகொள்ளும்படியாகத்தான். தேவன் சும்மா ஒன்றும் பெயர்களை மாற்றுவதில்லை. தேவன் குறிப்பிட்ட சில மனிதர்களுடைய அல்லது ஏதோ ஒன்றின் பெயரை மாற்றுகிறார் என்றால் அதிலே மிக ஆழமும், அர்த்தங்களும் இருக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை.

ஆபிரகாம் பெரிய படிப்பு படித்த பண்டிதர் அல்ல, ராஜாவும் அல்ல, தான் ஒரு பெரிய தேசத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று நினைத்தவரும் அல்ல, பெரிய போர் வீரானாகவும் அவர் இல்லை. ஆபிரகாம் ஒரு சாதாரண மனுஷன்தான் (ordinary person). ஆனாலர் தேசத்தின் இராஜாவைவிட பெரிய மனுஷனாக தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார்.

ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு மாத்திரமல்ல, எத்தனையோ விதமான ஜனங்களுக்கு அவர் தகப்பனானார் இவ்வளவு பெரிய ஆசீர்வாதங்கள்

ஆபிரகாமுடைய வாழ்க்கையில் வந்தது எப்படி? தேவனுடைய வல்லமை அவருடைய பெயரிலே மாத்திரம் அல்ல. அவருக்குள்ளாக அவருடைய வாழ்க்கையிலே வெளிப்பட்டதினாலே.

தேவன் ஆபிரகாமை என்ன செய்ய சொன்னார்? உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பன் வீட்டையும் விட்டுவிட்டு போ (ஆதியாகமம் 12:1).

தேசத்தை விட்டு விட்டு போ என்று தேவன் கூற என்ன காரணம்? ஆபிரகாமே நீ இருக்கிற இந்த தேசம் பாபேல் கோபுரம் இருக்கின்றதான தேசம். எனக்கு விரோதமான விக்கிரக ஆராதனையை உண்டுபண்ணின தேசம். மனிதர்கள் எனக்கு கீழ்படியாததினாலே நான் அவர்கள் பாஷையை தாறுமாறாக்கின தேசம். ஆகவே இது அசுத்தங்கள் நிறைந்த தேசம். சாத்தான் தனக்கு தலைநகரமாக கொண்டிருக்கின்ற தேசம். ஆகவே, இப்படிப்பட்டதான தேசத்தில் நீ இருக்கின்றவரை நான் உன்னை ஆசீர்வதிக்க முடியாது.

நாமும்கூட, நாம் வாழ்கின்ற இந்த பூமியோடு கூடுதலான ஒரு இணைப்பு, தொடர்பு, உறவு உடையவர்களாக இருப்போமானால், சில நேரங்களில் அதுவே நாம் நம்முடைய ஆண்டவரின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்கு தடையாக மாறலாம். தேசத்தை விட்டு விட்டு செல்வதென்றால், அது மிகவும் கடினமான விஷயம். ஒருவன் தன்னுடைய தேசத்தை விட்டுவிட்டால் அவன் ஒரு தேசாந்திரி, கிட்டதட்ட "அனாதை" என்கிறதான நிலை உடையவனாக மாறிவிடுகிறான். ஒரு குறிப்பிட்ட தேசத்தின் பிரஜையாக இருக்கிறவருக்கு அந்த தேசத்தில்தானே அங்கீகாரமும் அரவணைப்பும் கிடைக்கின்றது. ஆனால் பிரஜையாக இல்லாத தேசத்திற்கு போகும்போது, பிரஜையாக இருக்கின்ற தேசத்தின் நிலையை போன்றதான நிலை கிடைப்பதற்கான சாத்தியங்களே இல்லவே இல்லை.

ஆபிரகாம், தான் இருக்கின்ற தேசத்தைவிட்டு விட்டு செல்லவேண்டுமானால் அதனுடைய நிலை என்ன? பூமியிலே உனக்கென ஒரு இடம் இல்லை. ஆபிரகாம் தன்னுடைய சொந்த தேசத்திலிருந்து ஆரானுக்குச் செல்கிறார். தேராகு மரிக்கும் வரை ஆரானிலே இருக்கின்றார். அதற்கு பிற்பாடு புறப்பட்டு கானானுக்குள் வருகின்றார். சீகேமுக்கு வந்தவுடன், இதுதான் நான் உனக்குக் கொடுக்கபோகும் தேசம் என்று. ஆனால் அவர் அங்கேயிருந்து பெத்தேலுக்குப் போகிறார். பின்பு கானானை விட்டு விட்டு எகிப்துக்கே போய்விட்டார். எகிப்திலேயே அவர்கள் கிட்டத்தட்ட ஒன்றரை வருஷங்கள் வாழ்ந்த விட்டதாக எகிப்திய சரித்திரம் கூறுகின்றது. சாராளின் நிமித்தமாக பார்வோனுக்கு பிரச்சனை வந்துவிட்டதினாலேயே, எகிப்தைவிட்டு வெளியே வந்து அங்குமிங்குமாக கடந்து சென்று கடைசியிலே

பெயர்செபாவிலே வந்து குடியிருந்தார். எவ்வளவு தூரம் ஆபிரகாமை அலைய வைக்க முடியுமோ அவ்வளவு தூரம் அலைய வைத்துவிட்டு பெயர்செபாவிலே, பின்பு மேலே சீகேமிலே, பின்பு எபிரோனிலே குடியிருக்க வைக்கிறார்.

எபிரோனிலேயுள்ள கீரியாத் அர்பாவிலே சாராள் மரித்தபின்பு முதன்முதலாக ஆபிரகாம் ஒரு நிலத்தை சொந்தமாக வாங்குகிறார். சாராள் மரிக்கும்போது அவளுக்கு வயது 127. இப்பொழுது ஆபிரகாமுக்கு 137 வயது. இந்த 137வது வயதிலேதான், தேவன் தனக்கு தந்த தேசத்தில் ஆபிரகாம் ஒரு நிலத்தை வாங்குகின்றார். அதாவது, உன் தேசத்தை விட்டு நான் காண்பிக்கும் தேசத்துக்கு போ என்று ஆபிரகாமை தேவன் அழைத்து, இப்பொழுது ஆபிரகாமுக்கான தன்னுடைய தேசத்தில் ஒரு சிறிய காணியாட்சியை தேவன் இப்பொழுதுதான், ஆபிரகாமின் இந்த 137வது வயதில்தான் கிடைக்கச் செய்கின்றார். வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். இதன்படி பிள்ளைகளை பெற்றுக்கொள்வதற்கு ஆபிரகாமும், சாராளும் அவசரப்பட்டார்கள். ஆனால் தேவன் மிகவும் பொறுமையுடையவராகவே இருந்தார். இதற்கான காரணம் என்னவென்றால், ஆபிரகாமுக்குள் இருந்த பாபிலோனியத் தன்மை முற்றிலுமாக அழியும்படியாகத்தான் தேவன் இதுவரைக்கும் காத்துக்கொண்டிருந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. (ஏன் ஆபிரகாமுக்கு தேசத்தைக் கொடுப்பதற்கு மிக நீண்ட காலத்தை எடுத்துக்கொண்டார்)

ஆபிரகாம் ஊர் என்கிற தன்னுடைய பட்டணத்தை விட்டு பிழையான திசைக்கு போகும்போது, ஏன் தேவன் ஆபிரகாமை சரியான திசைக்கு வழி நடத்தவில்லையா? என்று நமக்கு தோன்றுகிறது அல்லவா? இஸ்ரவேல், பாபிலோன் ஒரு திசையில் இருக்க, ஆபிரகாமும், குழுவினரும் வேறே எங்கேயோ போகின்றார்கள். பாபிலோனை விட்டு புறப்பட்ட ஆபிரகாமை, தேவன் அவசரப்பட்டு தான் தெரிவுசெய்திருந்த தேசத்திற்குள் கொண்டுவந்திருந்தாரானால், இந்த இடத்திலேயும் ஆபிரகாம் ஒரு பாபிலோனியனாகத்தான் வாழ்ந்திருப்பான். ஆபிரகாமுடைய பாபிலோனிய கலாச்சாரம் அவனை விட்டு எடுபட்டுப் போகும்படியாகத்தான் இவ்விதமாக நடத்தினார் ஆகவே தேவனுடைய காலதாமதங்களுக்கு அர்த்தங்கள் உண்டென்பதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

தேவன் தருகின்ற ஆசீர்வாதங்களும், நன்மைகளும் கலப்படம் இல்லாமல் தூய்மையானதாக காணப்படவே தேவன் நம்முடைய பாத்திரத்தை முதலாவதாக வெறுமையாக்கிவிடுகிறார். ஆனால் சில நேரங்களில் வாழ்க்கையின் சில முக்கியமானவற்றை வெளியேற்ற மனதில்லாமல் பாதி அளவான பாத்திரத்தை மட்டும்

வெறுமையாக்கிவிட்டு என்னை நிரப்பும் என்று கேட்கின்றோம், ஆண்டவரும் நிரம்புகின்றார். ஆனால் ஆண்டவர் தருகின்ற ஆசீர்வாதங்கள் ஏற்கனவே இங்கே பாதி பாத்திரத்தில் இருக்கின்றவைகளோடு கலந்து கலப்படமாகி அதனுடைய செறிவு குறைந்த நிலையில், அது பெரிதான ஆசீர்வாதமாக இல்லாமல் போய்விடுகிறது.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த 21ம் நூற்றாண்டு காலத்தில், ஒரு சில சகாப்தங்களில் அநேகர் இரத்த சுத்திகரிப்பபு செய்து கொள்வதின் மூலம் காப்பாற்றப்படுகின்றதை நாம் கேள்விப்படுகின்றோம். இந்த இரத்தசுததிகரிப்பு முறையைக் கண்டுபிடித்தவர்களே இஸ்ரவேலர்கள்தான். பூமி முழுவதிலும் இந்த இரத்த சுத்திகரிப்பை செய்து கொள்கிறவர்கள் இஸ்ரவேலின் மூலமாகத்தான் அந்த ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்கிறான். எலும்புமுறிவுக்கான எக்ஸ்ரே எடுக்கின்றோமோ, இதனையும் கண்டுபிடித்தவர்கள் இஸ்ரவேலர்கள்தான்.

இஸ்ரவேலுக்கு எதிரானவன், தாமஸ் ஆலர்வா எடிசன் என்கிற அமெரிக்க இஸ்ரவேலன் கண்டுபிடித்த மின்விளக்குக்கு கீழே உட்கார்ந்துகொண்டு, இஸ்ரவேலன் கண்டுபிடித்த மைக்ரோபோனிலே, இஸ்ரவேலன் கண்டுபிடித்த ரேடியோ கேமராவுக்கு இஸ்ரவேலனை திட்டி அதனை பதிவு செய்கின்றான். அந்த பதிவிலே அவர் கூறுவது என்னவென்றால் ரிமோட்கண்ட்ரோலை பயன்படுத்தி குண்டு வெடிக்கச்செய்து இஸ்ரவேலே உன்னை தீர்த்து கட்டிடுவேன் என்று. ரிமோட் கண்ட்ரோலை கண்டுபித்ததும் இஸ்ரவேலர்தான். வியாதிகளினால் ஏற்படுகிற மரணங்களை தவிர்க்கவும் உயிர்களை காப்பாற்றவும், இஸ்ரவேலர் கண்டுபிடித்ததான நோய் எதிர்ப்புக்கான மருந்துகளும், மாத்திரைகளும் உலகின் பலபகுதிகளிலும் காணப்படுகின்றது. குறிப்பாக ஈரான் தேசத்தில் கூட இஸ்ரவேலர் கண்டுபிடித்ததான நோய் எதிர்ப்புக்கான மருந்து மாத்திரைகள் இருக்கின்றது. இந்த ஈரானியர்தான் இஸ்ரவேலரை தாக்கும்படியான விரோத செயலைச் செய்கின்றான். இஸ்ரவேலர் மூலமாக தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதை ஈரானியர் நினையாமல் போகின்றனர். இஸ்ரவேலை திட்டுகிறான், இஸ்ரவேலுக்கு விரோதமான செயலைச் செய்கின்றான்.

அமெரிக்காவிலே வாழ்ந்த இஸ்ரவேலர்களான ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்ததான விமானத்திலேதான் இஸ்ரவேல் விரோதி பறந்துசென்று இல்ரவேலிலே தாக்குதல் நடத்தினான். பூமியின் வம்சங்களெல்லாம் இஸ்ரவேலர்கள் மூலமாக இன்னும் ஆசீர்வதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

கணினி தொழில் நுட்பமானாலும் சரி, புளுரே, டிவிடி டெக்னாலஜி, பிளாஸ்டிரைவ், யுஎஸ்பி டிரைவ் என இவைகள் அனைத்தையும் கண்டுபிடித்து முழுஉலகத்துக்கும் ஆசீர்வாதமாக இருந்து வருகிறவர்கள் இந்த இஸ்ரவேலர்கள்தான்.

ஆகவே தேவன் ஆபிரகாமுக்கு சொன்னபடி பூமியிலுள்ள சகலரும் இஸ்ரவேல் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அறிந்துகொள்கிறோம். இது ஒரு பகுதி தேவன் ஆபிரகாமுக்கு சொன்ன மற்றொரு பகுதி என்ன? உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்.

ஆதியாகமம் 12:1 – ''கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.'' தேவன் ஏன் ஆபிரகாமை தன் தேசத்தைவிட்டு வெளியே போகச் சொன்னார்?

- ஆபிரகாம் இருந்த இடம் பாபேல் கோபுரம் என்கிற உலகிலே முதன்முதலில் விக்கிரகாராதனைக்கு வழிவகுக்கிற அந்த கோபுரம் அங்கே இருந்ததினால்.
- தேவன் தான் தெரிவு செய்திருந்த தேசத்துக்கு ஆபிரகாமை கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக.

ஆபிரகாமுக்காக தேவன் தெரிவு செய்த தேசம் எங்கேயிருக்கிறது?

இன்றைக்கான உலக வரைபடத்தை நாம் பார்த்தால் அதின் மேல்பக்கத்திலே வடக்கு என்று குறிப்பிடப்பட்டிருக்கும். முழுமையாக வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பது குறிக்கப்பட்டிருக்கும். இப்படியாக தேசப்படத்தை அமைத்தவர் ''தாலமி'' என்பவர். அவர்களை இவ்வாறு பழமைகாலம் தொடங்கி இந்நாள்வரைக்கும் அந்த தேசப் படத்தை பயன்படுத்துவதற்கான நோக்கம் - ''காந்தம்''

ஒரு காந்தத்தைக் கட்டி தொங்கவிட்டால் அது வடக்கு தெற்காகத்தான் நிற்கும். ஏனென்றால் வடதுருவம், தென்துருவம் ஆகியவற்றினுடைய காந்தசக்தியின் ஈர்ப்புவிசை, இதனால்தான் இப்படிப்பட்டதான உலகவரைபடம் நம்முடைய கைகளிலே கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, உண்மையாய் இப்படி ஒரு படத்தை வரையவேண்டுமானால் மேலே கிழக்கு தான் இருக்க வேண்டும். ஏனென்றால் கிழக்கு பக்கமாகத்தான் பூமி சுழன்று கொண்டிருக்கின்றது அல்லது பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கிறது. ஒரு வாகனம் எந்த திசையை நோக்கி பிரயாணம் செய்கின்றதோ அதுதான் அந்த வாகனத்தினுடைய முகப்பு. நம்முடைய முகம் எங்கேயிருக்கிறது. நாம் பிரயாணம் பண்ணுகிற திசையை நோக்கி இருக்கின்றது. ஆக உலகம் சுற்றிக்கொண்டிருப்பது கிழக்கு நோக்கி, ஆகவே மேல் பகுதி என்பது கிழக்கு பக்கமாக இருக்கவேண்டும்.

அப்படியானால், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்று ஒரு புத்தம் புதிய வரைபடத்தை அப்படியே உருவாக்கி, வலது, இடது பறமாக ஆர்க்டிக், அண்டார்டிக்

என்பனவற்றை சரியாக ஒருநிலைப்படுத்தி, நீங்கள் பூமி என்று சொல்கின்ற நிலப்பரப்பை சரியாக கூர்போட்டு, மேலிருந்து கீழாக ஒரு கோடுபோட்டு, அதைப்போல தெற்கிலிருந்து வடக்காக மற்றொரு கோடு ஒன்றையும் போட்டால், அந்த இரு கோடுகளும் சந்திக்கும், அந்த நடுநிலைபுள்ளி இஸ்ரவேலிலிருக்கிற பெத்தேல் என்ற இடத்தில் வருகிறது. இன்றைய உலக வரைபடத்தின்படி உலகத்தின் மத்தி எகிப்தில் இருக்கின்றது. ஆனால் உண்மையாய் வரைபடத்தை வரைந்தோமானால், பூமத்திய ரேகையையும் அழித்துவிட்டு, புத்தம் புதிய இரண்டு கோடுகளை போட்டால் பெத்தேல்தான் உலகத்தின் மத்தியாக வருகின்றது. ஆகவே உலகத்தின் மத்தியை தேவன் தமது தேசமாக தெரிவு செய்துகொள்கிறார். இப்படி தெரிவுசெய்துகொண்டு இந்த என் தேசத்தை நான் அழகுபடுத்துவேன் என்று தேவன் தீர்மானிக்கிறார். அவனவனுக்கு ஒரு சமுத்திரம் இருக்கும். ஒரு வாழ்வு இருக்கும். ஆனால் என் தேசத்திலோ, நன் மூன்றுவிதமான நீர்நிலைகளை உண்டுபண்ணுவேன். 1. மத்திய தரைக்கடல் 2. கலிலேயாக் கடல், கலிலேயா என்பது கடலே கிடையாது, ஏனென்றால் மேலிருந்து கீழாக அதன் நீளம் 19 கிலோமீட்டர்தான், இடமிருந்து வலமாக வெறும் 13 கிலோ மீட்டர்தான். ஒரு இடத்திலிருந்து தொடங்கி, அப்படியே சுற்றிவந்தால் 53 கி.மீ. தான். ''வாவி'' போல் இருந்த அதை கடல் என்று அழைத்ததற்கு காரணங்கள் இருக்கின்றன. ஏனென்றால் அந்த வாவியை சுற்றி அமைந்திருந்த பல நகரங்கள் அந்த காலத்தில் நாடுகள் என்றும் அழைக்கப்பட்டன. அக்கரையிலிருக்கின்ற அந்த குறிப்பிட்ட நாட்டிற்கு சென்றார் என்றும் வேதத்தில் வாசிக்கின்றோம். நகரங்கள் நாடுகள் என்று அழைக்கப்பட்டதினால் இந்த வாவி கடல் என்று அழைக்கப்பட்டது. ஆனால் அது நன்னீர், இதில் மாத்திரம் காணப்படுகிற ஒரு மீன்வகை உண்டு. ஆனால் அந்த மீனுக்கு பெயர் கொடுக்கப்படவில்லை. உலகில் இப்படிப்பட்டதான மீன்வகை வேறெங்குமில்லை என்பது உண்மை. இப்படிப்பட்டதான ஒரு ஆசீர்வாதமான நீர்நிலையாக தேவன் இதை உருவாக்கியிருந்தார். மட்டுமல்லாமல் உலகத்திலே மிக ஆழமான ஒரு இடத்தையும் தேவன் தன்னுடைய நாட்டிற்கு கொண்டுவந்து விட்டார். அது என்னவென்றால் ''சவக்கடல் அமைந்திருக்கும் பிரதேசம்'' கடல் மட்டத்திலிருந்து 427 கி.மீ. கீழே இருக்கிறது. சவக்கடலில் உலகில் இல்லாத 19 வகையான கனிஉப்புகள் இருக்கின்றன. உப்பில்கூட சூரியகுளோரைடு 32 முதல் 34 சதவீதம் கலந்திருப்பதால் அமிழ்நதுபோகாதபடிக்கு அதிலே மிதக்க முடியும். இவ்விதமாக தேவன் உலகின் நடுவில் இருக்கின்ற தான் தெரிந்துகொண்டு அந்த இஸ்ரவேல் தேசத்திற்கு மூன்று வித்தியாசமான கடல்களைக் கொடுத்தார் மட்டுமல்லாமல், இஸ்ரவேல் நாட்டின் மண்ணின் செழிப்பு மிக ஆசீர்வாதமான செழிப்பு ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த தேசத்தின் தன்மைகளை வசனத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம்.

உபாகமம் 11:10-12 – “நீ சுதந்தரிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போல் இராது; அங்கே நீ விதையை விதைத்து, கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய். நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம்; அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்.” எப்படிப்பட்டதான தேசத்தை கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுக்கின்றார்? என்பதனை மட்டுமல்லாது இந்த மூன்று வசனங்களும், தேவன் அந்த தேசத்தின்மேல் எந்த அளவு அன்பு வைத்திருக்கின்றார், ஆசை வைத்திருக்கின்றார்? எந்த அளவு அவர் அந்த தேசத்தை பராமரிக்கின்றார் என்பதனைப் பற்றி தெளிவாக சொல்லியிருக்கின்றது அல்லவா? வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசமாம். இஸ்ரவேல் தேசத்தில் இரண்டுவிதமான மழைகள் பெய்யும். 1. முன்மாரி மழை 2. பின்மாரி மழை. முன்மாரி மழை ஏப்ரல் மாதத்திலும், பின்மாரி மழை அக்டோபர் மாதத்திலும் வரும். முன்மாரி மழை 10 நாட்கள் முதல் 20 நாட்கள் வரை பெய்யும், சில நேரங்கள் ஒருவாரம் மட்டும் பெய்யும். எவ்வளவு பெய்தாலும் அந்த மழைத் தண்ணீரானது இரண்டு மாதம்வரைக்கும் அந்த மலையின் மேல்பகுதியிலே தேங்கியிருக்கும்.

ஒருமலையை மூன்று பகுதிகளாக பிரித்துக்கொண்டால், அந்த மழை பெய்ததற்கு பின்பு இரண்டு மாதங்களுக்கு அந்த மலையின் மேற்பகுதியில், அந்த மழைதண்ணீர் தேங்கியிருக்கும் அந்த ஈரத்தன்மை அப்படியே இருக்கும். இரண்டு மாதங்களுக்கு பின்பு நடுபகுதிக்கு வரும். அடுத்த இரண்டு மாதங்களுக்கு பின்பு கீழ்பகுதிக்கு வரும். பின்பு பூமிக்கு உறிஞ்சிகொள்ளுகிற அந்த வேளை வருகிறபோது பின்மாரி மழை பெய்து இவ்விதமாக தேங்கியிருக்கிற நிலைகள் உண்டாகும். என்ன இது? பூமியிலெங்கும் நடக்காத இப்படிப்பட்டதான சம்பவம் இங்கே நடக்கிறதே என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் அதை ஆராய்ந்து பார்த்தும் அவர்களால் விடையை கண்டுபிடிக்க முடியவில்லை.

நாம் வாசித்த இந்த வசனத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. மோசே மூலமாக தன்னுடைய ஜனத்திற்கு தேவன் இந்த வசனங்களை சொல்லுகின்றார். நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசம் நீங்கள் விட்டுவந்த எகிப்து தேசத்தைப் போலல்ல, ஏனென்றால் அந்த காலத்திலே எகிப்து நல்ல செழிப்பான தேசம், நைல்நதி இருக்கின்றபடியினால் எகிப்து தேசத்திலே ஏராளமான பாலைவனங்கள் இருந்தாலும் 6,783 கி.மீ. ஓடுகின்ற அந்த நைல் நதி கிட்டதட்ட 2,500 மைல்கள். அது ஓடுவது

எகிப்து தேசத்துக்குள், ஆகவே அந்த நதியின் இருமருங்கிலும் காணப்படுகின்ற நிலங்கள் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படுகின்றன, மிருக ஜீவன்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. பச்சைபசேலென்று செழுமையாக இருக்கும். அங்கேதான் எகிப்தின் கோசேன் நாட்டில் இஸ்ரவேலர் இருந்தனர். எகிப்திலிருக்கிற அந்த கோசேன் நாட்டிலிருந்துதான் இஸ்ரவேலர்கள் புறப்பட்டு பாலைவனம் வழியாக கானான் நாட்டிற்குள் வரப்போகின்றார்கள். இப்பொழுது தேவன் சொன்ன வார்த்தையை கவனியுங்கள். ‘‘நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசம், நீங்கள் விட்டுவந்த எகிப்து தேசத்தைப் போலல்ல’’ எகிப்திலே நீளமான நைல்நதி ஓடலாம், நைல் நதியிலிருந்து தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்கின்றபொழுது கீரைத்தோட்டத்துக்கு தண்ணீர் பாய்கின்ற அனுபவம் போன்றதொரு அனுபவமாகவே இருக்கும். அந்த காலத்தில் இருந்ததுபோலதான் pedaling system (கால்களால் மிதித்து தண்ணீர் பாய்கின்ற முறை). ஆனால் நீங்கள் இப்பொழுது சுதந்தரிக்கப்போகிற தேசம் என்னுடைய தேசம், அதற்கு நீங்கள் தண்ணீர் பாய்க்க வேண்டியதில்லை, நான் பார்த்துக்கொள்வேன். ஏனென்றால் கர்த்தர் கொடுக்கின்ற தேசம், வானத்தின் மழைநீரை குடிக்கின்ற தேசம். இஸ்ரவேல் நாடு சிறிய நாடுதான், ஆனால் அதை அடைவதற்கு எத்தனைபேர் முயற்சி செய்கின்றார்கள். காரணம் ஒன்றே ஒன்றுதான் ‘‘அது வானத்தின் மழைநீரை குடிக்கின்ற தேசம்’’. அரேபியனுக்கு வேறே நாடில்லாமையினாலேயே இஸ்ரவேல் நாட்டை கௌவப் பார்க்கின்றான். பாலஸ்தீனனுக்கு வீடில்லாமலா, அங்கேயேயிருந்து இஸ்ரவேலை வதைத்துக்கொண்டிருக்கின்றான். இஸ்ரவேல் தேசத்தின் செழிப்பை விட்டுவிட்டுப்போக அங்கே இருப்பவனுக்கு மனமே இல்லை. தூர இருப்பவனுக்கு அந்த செழிப்பை அனுபவிக்க வேண்டும் என்கிற அந்த ஆசை விடவுமில்லை.

இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? இஸ்ரவேல் தேசத்தில் பெய்கின்ற முன்மாரி மற்றும் பின்மாரியினால் ஏற்படுகின்ற செழிப்புதான். முன்மாரி முதல் ஆறு மாதங்களுக்கு போதுமானதாகவும், பின்மாரி அடுத்த ஆறு மாதங்களுக்கு போதமானதாகவும் இருக்கும். ஆகவே அதிகமாக தண்ணீர் தேவைப்படும் பயிர்களை மலைகளின் மேல்பகுதியில் பயிரிடுவார்கள். தண்ணீர் பாய்க்க தேவையில்லை. இரண்டு மாதங்களுக்கு பிறகு, அது அப்படியே நடுப்பகுதிக்கு இறங்கிவருகிறது. மேல்பகுதியும், காய்ந்துவிடும், கீழ்பகுதியும் காய்ந்துவிடும், நடுவிலே மாத்திரம் பசுமையாக இருக்கும். இப்பொழுது தண்ணீர் தேவையான பயிர்களை நடுப்பகுதியில் விவசாயம் செய்வார்கள். இன்னும் இரண்டு மாதங்களுக்கு பின்பு மூன்றில் ஒரு பகுதியாக கீழ்பகுதிக்கு இறங்கிவிடுகிறது. கீழ்பகுதியில் இரண்டுமாதம் விவசாயம் செய்வார்கள். மழை பெய்ததிலிருந்து ஆறு மாதங்களில் தண்ணீரானது இப்பொழுது

பூமியினால் உறிஞ்சப்படுகிறதோ, அப்பொழுது தண்ணீர் இல்லாத நிலை என்று வருகின்றபோதே ‘‘பின்மாரி’’ பெய்துவிடும். ‘‘என்தேசத்திலே எனக்கு தண்ணீர் பாய்ச்ச தெரியும், நீ தண்ணீர் பாய்ச்ச தேவையில்லை: என்கிறதான அர்த்தத்திலேயே ஆண்டவர் கூறுகின்றார். ஏனென்றால் வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் என் கண்கள் என் தேசத்தின்மீது பதிக்கப்பட்டிருக்கும் என்று கர்த்தர் கூறியிருக்கிறார்.

தேவன் இஸ்ரவேலரை அவர்களின் மீறுதலுக்கான விதங்களில் தண்டித்தார். இஸ்ரவேலரை தேவன் தண்டித்த விதங்கள் பல இருக்கின்றன. குறிப்பாக நியாயாதிபதிகளின் காலத்திலே, இஸ்ரவேலர்களை அவர்களுடைய நாட்டிலேயே இருக்கவைத்து, அந்நிய நாட்டில் இவர்களை ஆக்கிரமித்து ஒடுக்குகின்ற விதங்களிலே தண்டித்தார். (யாபீன் கூட்டத்தார், அம்மோனியர், ஏதோமியர்….) இவர்கள் தங்கள் நாட்டில்தான் குடியிருந்து விவசாயம் செய்வார்கள், ஆனால் ஆக்கிரமிக்கிற அந்நியன் அதின்பலனை எடுத்துக்கொண்டு போய்விடுவான். இவர்களின் மிருகங்களையும் கௌவிக்கொண்டு கொன்றுவிடுவார்கள். இந்த சூழ்நிலையில் அழுது மனந்திரும்புவார்கள். உடனே கர்த்தர் அவர்களிலிருந்து ஒரு இரட்சகனை நியாயாதிபதியாக எழுப்புவார். இவரது காலங்கள்வரை ஜனங்கள் ஒழுங்காக இருப்பார்கள். பின்பு தங்களுடைய பாவநிலைக்கே மக்கள் சென்று விடுவார்கள். பின்பு ஒடுக்குகிறவன், அழுது மனந்திரும்புகிற நிலை, இரட்சகன் எழுப்பப்பட்டு ஜனங்கள் காக்கப்படுதலும், இளைப்பாறுதலும் இருக்கும். இது சுழற்ச்சிபோல மறுபடியும், மறுபடியும் நடைபெற்றதைத்தான், நாம் நியாயாதிபதிகளின் புத்தகத்தில் வாசித்துப் பார்க்கின்றோம். நியாயாதிபதிகளின் காலம் முடிந்து, கிட்டதட்ட இராஜாக்களின் காலகங்களின் முடிவு பகுதிகளுக்கு வருகின்றபோது, இவர்களை நாட்டிற்குள்ளேயே வைத்து அந்நியர்களை வைத்து ஆக்கிரமிப்பதைவிட நாட்டைவிட்டு வெறியேற்றி வேதனைப்படுத்திடவேண்டும் என்கின்றதான எண்ணம் தேவனுக்குள் வந்தது. முதன் முதலில் 10 கோத்திரங்களை கொண்ட வட ராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் பகுதியை தேவன் கி.மு. 722ம் ஆண்டு அசீரியர்களைக் கொண்டு, இஸ்ரவேலர்களை அவர்களுடைய நாட்டிலிருந்து துரத்தியடித்தார். சாலொமோன் காலத்திற்கு பின்பு உண்டான பிரிவின் நிமித்தம் ‘‘தாண் முதல் பெத்தேல் வரைக்குமான பகுதி இஸ்ரவேல் என்றும், பெத்தேலுக்கு கீழே பெயர்செபா வரை இரண்டு கோத்திரங்களைக் கொண்ட யூதராஜ்யமும் உண்டானது. தாண் முதல் பெத்தேல் வரைக்குமான இடங்களிலே இருந்த அந்த 10 கோத்திரத்தாரை தேவன் அசீரியர்கள் மூலமாக நாட்டைவிட்டு துரத்தியடித்தார். ஜனங்கள் துரத்தப்பட்டபடியினால் தேவன் அந்த தேசத்தை அழகுபடுத்துவதையும்,

ஆசீர்வதிப்பதையும் நிறுத்திவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். என் ஜனங்களே இங்கேயில்லை, பின்னே ஏன் அழகுபடுத்த வேண்டும்? பெற்றோர் பிள்ளைகளை தண்டிக்கின்றபோது, அந்த தாக்கங்களின் உணர்வுகளுக்கு தாங்களும் உட்படுகின்ற, அந்த அனுபவத்தைப் போலவே. பத்து கோத்திரங்களுக்கு உட்பட்ட மலைகளில் கர்மேல், எப்பிராயீம் மலைகள், சமாரியா மலைகள் ஆகிய இந்த மலைகளெல்லாம் பாழடைந்துபோயின. இந்த சமயத்தில் அங்கே அந்த மலைகளில் நடந்தது என்னவென்றால், ஒருவிதமான சாம்பல் நிற தாவரங்கள் தோன்றின. அதை மிருகங்களும் சாப்பிடாது, அது மனிதர்களுக்கும் பிரயோஜனப்படாது, இன்றைக்கும் அந்த மலைகளில் இவ்விதமான தாவரங்கள் இருக்கினறதை நாம் பார்க்க முடியும். அதிலே ஒரு பழமும் கிடையாது, அதை கீரை வகையாகவும் பயன்படுத்த முடியாது. மொத்தத்தில் அது பார்க்கவே மிக அசிங்கமாகவே இருக்கும். ஆகவேதான், தேவன் இஸ்ரவேலைப் பார்த்து நீ விதவையைப்போல ஆகிவிட்டாய் என்று கூறுகின்றார். இஸ்ரவேலர் அங்கேயிருந்து சென்றுவிட்டபடியினால் அங்கே வாழ்வார் ஒருவருமில்லை.

இஸ்ரவேலருக்கு நடந்தவற்றை யூதாவுக்கு நடந்தவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது யூதாவுக்கு நடைபெற்றவைகள் சற்றறு வித்தியாசமாகவே இருக்கின்றன. கி.மு. 586ல் தேவன் யூதர்கள் பாபிலோனுக்கு அனுப்பிவிட்டார். ஆனால் நீண்டகாலமாக அல்ல. 70 ஆண்டுகளில் அவர்களை அவர்களுடைய இடத்திற்கு திரும்ப கொண்டுவந்துவிட்டார். இவ்விதமாக கொண்டுவரப்பட்டவர்கள் மீண்டுமாக துரத்தியடிக்கப்பட்டது கி.பி. 70ல். மீண்டுமாக அவர்களுக்கென்று ஒரு தனிதேசம் கிடைத்தது, மே 14ம் தேதி 1948ம் ஆண்டு. இதிலே 1948லிருந்து திரும்பி வந்தவர்களில், கி.பி.70ல் போன தெற்கு ராஜ்ஜியத்தினர் மாத்திரமல்ல. கி.மு.722ல் போன இஸ்ரவேலர்கள் கூட இங்கே வர ஆரம்பித்துவிட்டனர். வந்தவர்கள் சமாரியா மலைக்கும் சென்று வாழ ஆரம்பித்தார்கள். இங்கே பாலஸ்தீனர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் ஆங்காங்கே வாழ்வின்றனர்.

இஸ்ரவேல் ஜனங்கள் 1948லிருந்து மறுபடியும் வெவ்வேறு நாடுகளிலிருந்து இஸ்ரவேல் தேசத்துக்கு திரும்பி பர ஆரம்பித்ததிலிருந்து, அங்கே சிறுசிறு குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. வேதகாலத்தில் இஸ்ரவேலர்கள் வாழ்ந்த முக்கிய கேந்திர ஸ்தலங்கள், ஆபிரகாம் வாழ்ந்த எப்ரோன், கீரியாத் அர்பா ஆகிய தேசங்கள் மற்றும் பெத்தேல், இஸ்ரவேலருக்கு முதல் தலைநகரமாக இருந்த சீலோ ஆகிய இந்த கேந்திர ஸ்தலங்களில் இஸ்ரவேலர்கள் குடியிருப்புகளை அமைக்க ஆரம்பித்ததுதான், பக்கத்திலிருந்ததான பாலஸ்தீனருக்கு வலியை ஏற்படுத்தினது. ஏனென்றால் பெத்தேலை ரமாலாவிலிருந்து பார்க்க முடியும். எனவே பெத்தேலுக்கு இஸ்ரவேலர்கள் வருவதைக் கண்டவுடன் ரமாலாவிலிருக்கிறன் பார்க்கின்றபொழுது, பெத்தேலுக்கு சென்று பிரச்சனையை இழுப்பார்கள். 1948க்கு பிறகு இந்த இஸ்ரவேல் ஜனங்கள்,

இஸ்ரவேல் தேசத்துக்கு வந்து வாழும்பொழுது, இந்த சாம்பலாய் தெரியும், இந்த மலைகளில் வேதாகம காலங்களில் நம்முடைய மூதாதையர்கள் திராட்சை தோட்டங்கள் நாட்டியிருக்கிறார்கள், ஒலிவ தோப்புக்களை நாட்டியிருக்கிறார்கள், இதை அறிந்துகொண்ட இவர்கள் நாமும் முயற்சி செய்வோமே என்று எண்ணி விவசாயம் செய்ய ஆரம்பிக்கின்றார்கள். இவர்கள் விவசாயத்தை மேற்கொள்ள ஆரம்பித்தவுடனே இஸ்ரவேலிலே மீண்டுமான முன்மாரி மற்றும் பின்மாரி பெய்ய ஆரம்பித்து விட்டது. இப்பொழுது வடராஜ்ஜியத்தை சேர்ந்ததாக இருந்த சீகேம் பிரதேசத்தைச் சார்ந்த சமாரியா மலைகளிலே இஸ்ரவேலர்கள் திராட்சை தோட்டங்களை அமைத்திருக்கிறார்கள். அந்த திராட்சை தோட்டத்தில் வேலை செய்வதற்கு இஸ்ரவேலர்கள் போதவில்லை.

ஏனென்றால் இவ்வளவு நடுவோம் என்று நட்டால், அவர்கள் எதிர்பார்த்ததிற்கும் அதிகமாக விளைகிறது. குத்துமதிப்பாக இவ்வளவுதான் விளையும், அதற்கு இவ்வளவுபேர் வேலைசெய்ய இருந்தால் போதும் என்று நினைத்தால், அவர்கள் நினைத்ததைவிட அதிகமான விளைச்சல் உண்டாகி தோட்டத்தில் வேலைசெய்ய இஸ்ரவேலர்கள் போதவில்லை என்கிற நிலை உண்டாகிவிட்டது. இந்த சமயத்தில் இஸ்ரவேலராகிய யூதர்கள் 60,00,000 பேர்கள்தான் வாழ்ந்தார்கள். பாலஸ்தீனர்களையும் வேலைக்கு அமர்த்த முடியாத நிலை. இந்த யூதர்களின் திண்டாட்டத்தைக் கண்ட சில கிறிஸ்தவர்கள் யூதர்களுக்கு உதவிசெய்வோம் என்று நினைத்து கொஞ்சம் கொஞ்சமாக உதவி செய்ய ஆரம்பித்தார்கள். இவ்வதமாக யூதர்களுக்கு உதவி செய்யும் கிறிஸ்தவ குடியிருப்புகள் பெரிய பெரிய குடியிருப்புகளாக சமாரியா மலையிலே இருக்கின்றன.

எரேமியா 31:5,6 – ‘‘மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவாய்; நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அநுபவிப்பார்கள். எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும்.’’ கர்த்தருடைய தீர்க்கதரிசனம் எரேமியாவின் மூலமாக கொடுக்கப்பட்டது. எரேமியா தெற்கு ராஜ்யத்தைச் சேர்ந்தவர், ஆகவே யூதாராஜ்ஜியத்தை குறித்து மாத்திரம் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பது அனைவருக்கும் தெரியும். எரேமியா புலம்பலின் தீர்க்கதரிசி என்று தெரியும். நேபுகாத்நேச்சாருக்கும் இவரைப் பற்றியதான தகவல்கள் தெரிய வந்ததால்தான் ஜனங்களை சிறைபிடிக்கும்போது எரேமியாவுக்கு எந்த தீங்கும் செய்யாதபடி பாருங்கள் என்று சொல்லியனுப்புகிறார். ஆகவே எரேமியா புஸ்தகமும், புலம்பல் புஸ்தகமும் யூதா ராஜ்ஜியத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு எழுதப்பட்டது என்பது

தெளிவாகிறது. ஏனென்றால் எரேமியா எழுதுகின்றபொழுது வடக்கு ராஜ்யம் இல்லை. அது கி.மு. 722ல் சிறைபிடிக்கப்பட்டு விட்டது.

ஆனால் எரேமியா கூறுகின்ற தீர்க்கதரிசனம் எதைப்பற்றினது? சமாரியவின் மலையைப் பற்றி கூறுகின்றார். சமாரியா தெற்கு ராஜ்ஜியத்திற்குரியதல்ல, அது வடக்கு ராஜ்ஜியத்திற்குரியதே. எரேமியா யூதா ராஜ்ஜியத்திற்கு சொல்லுமாற்போல் வடக்கு ராஜ்ஜியத்திற்கும், தீர்க்கதரிசனம் சொல்லுகின்றார். வடக்கு ராஜ்ஜியம் திரும்பிவரவில்லையே, யூதாராஜ்ஜியமாகிய தெற்கு ராஜ்ஜியம் மாத்திரம்தானே திரும்பி வந்திருந்தது, அப்படியென்றால் வடக்குராஜ்ஜியத்தை சேர்ந்தவர்கள் எப்பொழுது வந்திருக்க வேண்டும். 1948ம் ஆண்டிற்கு பிறகுதான் என்பதனை நாம் புரிந்துகொள்கிறோம்.

இப்பொழுது எரேமியா கூறுகின்றது யூதா ராஜ்ஜியம் பாபிலோனிலிருந்து திரும்பி வருவதைப் பற்றினதல்ல என்பதனை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் திரும்பி வந்தது பெத்தேலுக்கு, பெத்தேலை தாண்டிதான், சமாரியவுக்கு செல்லவேண்டும். மட்டுமல்ல எரேமியாவின் இந்த தீர்க்கதரிசனத்தில் எப்பிராயீம் மலையும் வருகின்றது. இவையெல்லாமே வடக்கு ராஜ்ஜியத்தில் இருக்கின்றது.

இப்பொழுது ஒரு சிலர் ‘‘வாருங்கள் போவோம்’’ என்கின்றனர். இப்படி கூறுகின்றவர் யார்? ஜாமக்காரர்கள். ஜாமக்காரன் என்பது ஆங்கில வேதாகமத்திலே ‘‘Watch Man’’ என்றிருக்கிறது. எபிரெயத்தில் ‘‘நட்ஷரின்’’ - இதற்கு கிறிஸ்தவர்கள் என்பதே அர்த்தமாகும். கிறிஸ்தவர்களாக நம்மைத்தான் யூதர்கள் ஜாமக்காரர்கள் என்று கூறுகின்றார்கள். எப்பிராயீம் மலையிலிருந்து ஜாமக்காரர்கள் கூப்பிடுகிற காலம் வரும். இது மனித கற்பனையினால் கோர்த்து சொல்லப்படுகிற விஷயம் அல்ல. எப்பிராயீம் மலைகளிலிருந்து இஸ்ரவேலர்களுக்கு திராட்சை தோட்டங்களை நாட்டியும், கவாத்து வெட்டியும், அறுவடை செய்தும் உதவி செய்கிறதில் கிறிஸ்தவ நிறுவனங்களில், நிறுவனங்களின் அமைப்பாளர்கள் இன்றைக்கும் இஸ்ரவேலிலே இருக்கிறார்கள். ஆகவே எரேமியா 31:5-6 இன்றைக்கான தீர்க்கதரிசனம். அது இந்நாட்களில் நிறைவேறிக்கொண்டு வருகிறது. மாதத்துக்கு மாதம் அந்த விதவை கோலமாறிய, சாம்பல் மாறி, பெரிய செழுமை இஸ்ரவேல் தேசத்தில் உண்டாகும்படி தேவன் கிருபை செய்து வருகிறார்.

ஏசாயா 61:5 - ‘‘மறுஜாதியார் நின்றுகொண்டு உங்கள் மந்தைகளை மேய்த்து, அந்நிய புத்திரர் உங்கள் பண்ணையாட்களும், உங்கள் திராட்சத்தோட்டக்காரருமாயிருப்பார்கள்.’’ ஏசாயா மூலமாகவும் இவர்களுக்கான

தீர்க்கதரிசனம் உறுதிப்படுகிறது. ஏசாயா 61:5ன் தீர்க்கதரிசனம் இன்றைக்கு அந்த இஸ்ரவேலர்களின் மலைகளிலே நடைபெறுகிறது. யூதர்களுக்காக அநேகர் சென்று இலவசமாக மந்தை மேய்த்துக் கொடுக்கிறார்கள். பயிர்விளைச்சல் செய்து கொடுக்கிறார்கள். இஸ்ரவேலுக்கு இப்படியாக உதவி செய்கிற கிறிஸ்தவர்கள் அமெரிக்காவிலிருந்து, இங்கிலாந்திலிருந்து, ஜெர்மனியிலிருந்து மற்றும் பிற பிரதேசங்களிலிருந்து வந்து உதவி செய்கிறார்கள். இவ்விதமாக உதவி செய்கிறவர்களை கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதிக்கிறார். இவ்விதமாக கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களெல்லாம் இந்த நாட்களில் அவ்விதமாக நிறைவேறிக்கொண்டு வருகின்றன. அதாவது தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னது, நீ உன் தேசத்தை விட்டுவிட்டு தேசாந்திரியாகப் போ என்று. உனக்கென ஒரு தேசம் வேண்டாம், ஆனால் நான் உனக்கு ஒரு தேசம் கொடுப்பேன் அது என்ன தேசம், உலகத்தின் மையத்திலிருக்கின்ற தேசம், செழிப்பான தேசம், தண்ணீர் பாய்ச்ச தேவையில்லாத கர்த்தரே மழையின் மூலமாக தண்ணீர் பாய்ச்சுகிற மகிமையான தேசம். அந்த தேசத்தின் விளைச்சல்கள் அமோகம். இந்த தேசத்திலே ரொம்ப பெரிய ஆசீர்வாதங்கள் உண்டு. இந்த தேசங்களிலுள்ள பாலைவனங்களில்கூட பயிர்விளைச்சல் பலன்களைப் பார்க்கலாம். உலகத்திலே சிறந்த தோட்டபழம் ‘‘ஜப்பா ஆரஞ்சு’’ விளையும் இடம் இஸ்ரவேல் உலகத்திலேயே சிறந்த மாதுளம் பழம் விளையும் இடம் இஸ்ரவேல். உலகத்திலேயே சிறந்த பேரீச்சம்பழங்களின் பட்டணம் எரிகோ இஸ்ரவேலிலே இருக்கின்றது. தேவன் இதைத்தான் இவ்விதமாக, வாக்குத்தத்தமாக கூறியிருந்தார் ‘‘பாலும் தேனும்’’ ஓடுகிற தேசத்துக்கு உங்களைக் கொண்டுபோகிறேன் என்று. ஒரு நாளில் 54 லிட்டர் பால் கொடுக்கிற மாடு இஸ்ரவேல் தேசத்தில்தான் இருக்கின்றன. இவ்வளவு பெரிய ஆசீர்வாதங்களையும் தேவன் இந்த இஸ்ரவேல் நாட்டிற்கு கொடுத்திருந்தார். ஆபிரகாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து எந்த தேசத்தை விட்டான்? உலகத்திலே நாகரீகத்திலே சிறந்த முதலிடம் வகிக்கின்ற மெசபதோமியா. உலகத்திலே ஜனங்கள் ஒன்றாகயிருந்து கட்டின பாபேல் கோபுரம் இருந்த பாபிலோன் பட்டணம். இவ்விதமாக பெயரும், புகழும் கொண்ட தேசம். இவ்விதமான இந்த தேசத்தையே இழந்து, இந்த தேசத்தின் தன்மையை ஆபிராமை விட்டுவிடும்வரை (மறந்துபோகும்வரை) தேசாந்திரியாகவே அவன் திரியும்படி தேவன் செய்தார்.

ஆதியாகமம் 12:1ல் உள்ளவைகளை, எபிரெய மொழியின் விளக்கத்தின் மூலமாக இவ்விதமாய் அறிந்துகொள்ளலாம், எப்படியென்றால் ‘‘சொன்னார்’’ என்பது ‘‘சொல்லியிருந்தார்’’ என்பதாக முடிவுபெறுகிற நிலையிலே கூறப்பட்டுள்ளது. இதற்கு இணையாக சில ஆங்கிலேய மொழிபெயர்ப்புகள் மட்டும்தான் தெளிவாக

சொல்லப்பட்டுள்ளன. எங்கு வைத்து கூறியிருந்தார். பாபிலோனிலே ஊர் என்கிற பட்டணத்தில் இருக்கின்றபொழுது, ஆனால் முதலில் ஆபிரகாம் செல்லவில்லை, பின்பு சென்றார், அதுவும் ஆரானுக்கு பின்பு, சீகேமுக்கு, பின்பு பெத்தேலுக்கு பின்பு எகிப்துக்கு என்று அறிந்துகொள்கிறோம். கடைசியில் 136 வயதில்தான், ஆபிரகாம் தேவன் தனக்குக் கொடுக்கின்ற அந்த சின்ன காணியாட்சியை வாங்கினார். அதுவும் தனக்காக அல்ல, தன் மனைவியை அடக்கம் பண்ணுவதற்காக. நாம் கவனித்துப் பார்க்கின்றபொழுது எவ்வளவு பாடுகள், துயரங்கள் மத்தியிலே ஆபிரகாமினது பிரயாணங்கள் கடந்து வந்திருக்கின்றன. இவ்வளவு பாடுகள் மத்தியிலே கடந்து வந்தாலும் அதற்குள்ளாக காணப்படுகிற தேவமகிமையானது மிகப்பெரியது என்பதே திண்ணம். எவ்வளவு அருமையான தேசத்தை தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்திருக்கின்றார்.

கர்த்தர் நம்மை எதையாகிலும் இழக்க வைத்தால், நாம் இழந்ததிலிருந்து ஆயிரம் மடங்கு பெருமதியானதை திரும்ப பெற்றுக்கொள்ளும்படியாகத்தான் இவ்விதமாக செய்கிறார் என்பதனை நம்மால் நன்கு வாங்கிக்கொள்ள முடிகிறது. தேசததை இழக்கச் சொன்னால், ஆனால் இவ்வளவு பெரிய ஆசீர்வாதம் நிறைந்த தேசத்தை தேவன் கொடுத்தார். இந்த தேசம் இன்றைய நாட்களிலே உலகத்திலே செழிப்பான தேசம். உலகத்தில் வேறெந்த நாட்டிலேயும் இல்லாத மிருகங்களும், பறவைகளும், மீன்வகைகளும், தாவர வகைகளும், இஸ்ரவேலிலே உண்டு. நமது இந்த புவியியல் அமைப்பின்படி இங்கு விளையக்கூடிய மா, வாழை, ஆகியவைகள் செழிப்பாக இஸ்ரவேலிலே வளர்கின்றன. ஆகவே ஆளாளுக்கு போட்டிபோடுகிறார்கள் இந்த இஸ்ரவேல் தேசத்தை பிடிப்பதற்கு.

அடுத்ததாக உன் இனத்தை விட்டுவிடு என்றார். இனத்தை விட்டுவிட்டு செல்வதுஎன்றால் என்ன? தன் சொந்தகாரர்களை விட்டுவிட்டுதான் தேவன் ஆபிரகாமை போகச் சொல்லுகிறார் என்று நமக்கு தெரியும். ஆனால் அது அப்படியல்ல. இனி ஆபிரகாமுக்கென்று ஒரு இனம் இருக்ககூடாது என்பதே தேவனின் தீர்மானமாக இருந்தது. ஏனென்றால் உன் இனத்தைவிட்டு விட்டு செல் என்றார். அது ஆபிரகாமுக்கென்று தனியொரு இனம் இருக்ககூடாது என்பதனை வெளிப்படுத்தவே. எப்படியென்றால் இனி நீ பாபிலோன் அல்ல, இனி நீ கல்தேயன் அல்ல, இனி உனக்கென ஒரு இனமோ, அதற்கான கலாச்சாரமோ இருக்க முடியாது என்பதற்காக ஆபிரகாமை தன் இனத்தை விட்டு வெளியே வரும்படி தேவன் கூறினார்.

குறிப்பிட்ட இனம்தான் நமக்கு கலாச்சாரத்தைக் கொடுக்கின்றது. நம்முடைய கலாச்சாரம் என்ன? தமிழ் கலாச்சாரம். இந்த கலாச்சாரம் எங்கேயிருந்து வருகிறது? தமிழ் இனத்திலிருந்து வருகிறது. இந்த தமிழ் இனத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து

அதற்கான கலாச்சாமும் வருகின்றது. ஆகவே ஆபிரகாமிடம் தேவன், உன் இனத்தை விட்டுவிடு என்று கூறினால் அந்த கலாச்சாரம் உனக்கு இனி இல்லை என்பதே அர்த்தமாகிறது.

கலாச்சாரம் என்றால் என்ன? அதுதான் பழக்கவழக்கம். நம்முடைய தமிழ் கலாச்சாரத்திலேயே நல்ல பழக்கவழக்கங்கள் அநேகம் இருக்கின்றன. மதம் சம்பந்தமான ஏதாகிலும் விஷயம் இருந்தால் நிச்சயம் அதை நாம் அகற்றிப்போட வேண்டும். மேற்கத்திய நாடுகளிலே போதகர்களை போதகர் என்று அழைக்காமல், அவர்களை அவர்களது பெயர்களை சொல்லியே அழைப்பது வழக்கமாயிருக்கிறது. நமக்குள்ளே இருக்கின்ற நம்முடைய தமிழ் கலாச்சாரம், எப்படிப்பட்டதான கலாச்சாரை பின்னணிக்குள் சென்றாலும், அதன் தரம் மாறாதவண்ணமாகவே தொடர்ந்து வருகிறதை நாம் நன்கு அறிந்திருக்கின்றோம். வயதை முதரிந்தவர்களை மதிப்புடன நடத்துவது என்பது நம்முடைய கலாச்சாரம் மாத்திரமல்ல, அது நம்முடைய வேதாகமத்தின் சத்தியமும் கூட. நரைமயிர் என்பது மகிமையான விஷயமாகும். ஆபிரகாமே, உன் கலாச்சாரத்தின் அடிப்படையில் நீ எவ்விதமாய் அமர்ந்து சாப்பிடுவாயோ? அதுகூட உனக்கு தெரியாததாய் போகும்படிதான் உன்னை உன் இனத்தைவிட்டு வெளியே போகும்படி உனக்கு கூறுகிறேன் என்று தேவன் சொல்லுகின்றார். மட்டுமல்ல உன் கலாச்சாரத்தின்படி எப்படி மற்றும் என்னவிதமான ஆடை அணியவேண்டுமென்பதெல்லாம் உனக்கு மறக்கும்படியாகத்தான் உன்னை உன் இனத்திலிருந்து வெளியே போகும்படி கூறுகின்றேன் என்று தேவன் சொல்லுகின்றார். ஆபிரகாமே உனக்குள் இருக்கின்ற முழுக்கலாச்சாரமும் பாபிலோனிய கலாச்சாரம் அதில் சிறிய துளிகூட இராதபடி செய்யவே உன்னை உன் இனத்திலிருந்து வெளியே வரும்படி அழைக்கின்றேன் என்று தேவன் கூறுகின்றார்.

அதனால் தேவன் என்ன செய்தார்? உடனே ஆபிரகாமை வாக்குத்தத்தம் செய்த இடத்தில் வைக்கவில்லை. வைத்திருந்தால் இஸ்ரவேல் தேசத்திலே ஒரு பாபிலோனியனாக அவன் வாழ்ந்திருப்பர். அமெரிக்காவில் வாழ்கின்ற இந்தியர்களைப்போல. இவனுக்குள்ளே ஒரு காரியத்தை செய்த ஆண்டவர் என்ன செய்யவேண்டும்? புதிய ஆடையைக் கொடுப்பதற்கு, பழைய ஆடையைக் களைய வேண்டும். எனவே ஆபிரகாமை மேயவிட்டார். எல்லா நாடுகளுக்கும் ஆபிரகாமை போகவிட்டார். கொஞ்சநாள் ஆரான், கொஞ்சநாள சீகேம், கொஞ்சநாள் எகிப்தில். ஆகவே அவன் செயர்செபாவுக்கு வந்தபோது என்ன சாப்பிடுவது என்று தெரியாது, என்ன உடுத்துவது என்று தெரியாது. ஒன்றும் தெரியவில்லை. அந்த நேரத்தில் பார்த்தால் சாராள் பிள்ளைபேறு காலத்தை நோக்கி வந்துவிட்டாள். அதற்கு முன்னே சாராள் கர்ப்பவதியாய் இருந்தால், ஒரு பாபிலோனிய தாயாய்த்தான் இருந்து, அவள் எல்லா வேலையையும் செய்திருப்பாள். ஆனால் அவர்களுடைய எல்லாவற்றையும்

ஆண்டவர் குழப்பி விட்டார். இப்போது பாருங்கள், ஏனெனில் நம்முடைய சரீரத்தை ஆண்டவர் ஒரு குறிப்பிட்ட விதத்தில் இயங்கும்படி உருவாக்கினார்.

இப்படியாக தேசாந்திரியாய் திரிந்துகொண்டு அலைந்தால், கிடைக்கிறதையெல்லாம் சாப்பிடுவது, கிடைக்கிறதையெல்லாம் உடுத்துகிறது, வேண்டிய நேரத்திலெல்லாம் தூங்குகிறது. இப்படி வாழ்கிற ஒரு மனுஷனுடைய வாழ்க்கை நிச்சயமாய் சீரழியும். அந்தவொரு சீரழிவு ஆபிரகாமுக்கு வரவேண்டும் என்று தேவன் விரும்பினார். ஏன்? அவனுக்குள் இருக்கிற அந்த கடைசி துளி பாபிலோனிய கலாச்சாரமும் அவனைவிட்டு இல்லாமல் போகவேண்டும். இப்போது, சாராள் கற்பவதியானபின் இரண்டு பேருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. எப்படி, எதையெல்லாம் செய்வது என்று தெரியாத நிலையில் அவர்கள் யாரிடத்தில் வரவேண்டும் ஆண்டவரிடத்திலே. உடனே ஆண்டவர் சொல்கிறார், இப்படி, இப்படி, செய் என்று ஆபிரகாமுக்கு சொன்னதுதான் இன்றைக்கு வேதாகம கால யூத கலாச்சாரமாகியது. அந்த கலாச்சாரத்தைப் பார்க்கும்போதுதான் நமக்குத் தெரிகிறது, முழுக்க, முழுக்க பரலோக கலாச்சாரத்தின் ஒரு சாயலைத்தான் தேவன் இஸ்ரவேல் கலாச்சாரத்திற்கு கொடுத்திருக்கிறார். என்ன ஆச்சரியம்! பரலோகத்தில் இருக்கப்போகிற விஷயத்தைத்தான் ஆண்டவர் இங்கு கொடுத்திருக்கிறார்.

ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். யூத கலாச்சாரத்தின்படி அல்லது வேதாகம யூத கலாச்சாரத்தின்படி பெண்வீட்டார் தங்கள் மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கிற விஷயம் அல்லது உரிமை கிடையாது. மாப்பிள்ளை வீட்டாருக்குத்தான் உண்டு. அதுவும் அந்த ஆணுக்கு 40 வயது ஆனவுடன் பெண்பார்க்கும் படலம் துவங்கும். மாப்பிள்ளையின் அப்பா, தன் குடும்பத்திலிருக்கின்ற நம்பிக்கைக்கு உரிய ஒரு நபருக்கு பொறுப்பு கொடுப்பார். நீ எங்கள் ஊரிலும், எங்கள் ஊரில் இல்லாவிட்டால் வேற ஊர்களிலும் போய் என் மகனுக்கேற்ற மணவாட்டியை தேர்வுசெய்து வந்து எனக்குச் சொல். அப்போது, அவர் பரிசுகளோடு போவர். அப்படிபோய் ஒரு மணவாட்டியைக் கண்டுவிட்டால், அவர்போய் அந்த மணவாட்டியோடு பேசி, அவளுடைய குடும்பத்தினருடன் பேசி, என் எஜமானின் மகனுக்கு உன்னை நான் தேர்வு செய்கிறேன், இப்படி சொல்லுகிறபோது, ஆபிரகாம், எலியேசர், ஈசாக்கு ஆகிய இவர்கள் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களெல்லாம் உங்களுக்கு ஞாபகத்துக்கு வரவேண்டும்.

இவற்றைச் சொல்லுகிறபோது அந்த பெண்வீட்டார் சம்மதம் கிடைக்கும். ஏனென்றால் அந்த பெண்வீட்டார் தங்களுடைய பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்காதா? எப்பொழுது யார் வருவார்களோ என்று ஏங்கிக்கொண்டு இருப்பார்கள். இயேசு பிறக்கிற காலத்தில் அநேக மரியாள்கள் இருப்பதற்கு காரணம், மரியா என்பது

‘‘மாரா’’ என்ற பதத்திலிருந்து வருவது, ‘‘கசப்பு’’ பெண்பிள்ளை பிறந்துவிட்டால் உடனே கசப்பு என்ற பெயர் வைப்பார்கள். ஏனென்றால் பெண்பிள்ளை பிறந்துவிடடால் அவர்களுக்கு நிறைய கஷ்டங்கள் அந்த காலத்தில் இருந்தது.

எனவே, கடைசியில் இந்த பரிசை எல்லாம் கொடுத்துவிட்டு அந்த நபர்தான் மாப்பிள்ளை வீட்டுக்கும், பெண்வீட்டுக்கும், போக்கும், வரத்துமாயிருப்பார். மாப்பிள்ளையினுடைய அப்பா, மாப்பிளையாகிய தன்னுடைய மகனைப் பார்த்து சொல்வார், தம்பி, உனக்கு ஒருத்தியை பார்த்தாகிவிட்டது, போ, என்னுடைய இந்த காணியிலே, ஒரு பக்கத்திலே இருக்கிற இடத்தில் போய் உனக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொள். அப்போது அவர் தான் கட்டப்போகும் அந்த மணவாட்டிக்காக அங்கே அவர் விரும்புகிறபடியே, அந்த இடத்தில் செய்துகொள்வார். தகப்பன் இருக்கிற அந்த காணியாட்சியிலே, மற்றொரு இடத்தில் தனக்காக ஒரு வீட்டைக் கட்டிக்கொள்வார். தகப்பன் அவ்வப்போது வந்து நோட்டமிடுவார். அவ்வப்போது, பெண்பார்த்த பிரதிநிதியை அனுப்பி பெண் வீட்டாரிடமிருந்து தகவல் எடுத்துக் கொண்டேயிருப்பார். இங்கிருந்து பரிசுகள் அனுப்புவார். எல்லாம் நடக்கும். அங்கே என்ன நடக்க வேண்டும் தெரியுமா? ஒவ்வொரு நாளும் அந்தப் பெண் ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒருவேளை இன்றைக்கு வந்து அழைத்துக்கொண்டு போவார்களோ என்று ஒவ்வொரு நாளும் அதைச் செய்வார்கள். ஒருவேளை இன்றைக்கு வரவில்லை என்றால், நாளைக்கு. ஆயத்தமில்லாமல் இருக்க முடியாது. நாளைக்கும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். சிலர் அப்பாவிடம் கேட்பார்கள், டாடி, இன்னும் ஒரு வாரத்தில், இரண்டு வாரத்தில், அல்லது இன்னும் ஒரு மாதத்தில் நான் போய் பார்க்கலாமா? என்று கேட்பார். ஆனால் தகப்பன் என்ன சொல்வார் தெரியுமா? சொல்லமாட்டேன் என்பார்.

இந்த கதையைப் பார்த்தால், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி சபையில் செயல்படுகிறது போல தெரிகிறது. பாருங்கள், அதாவது நாம் மணமகள் (மணவாட்டி). மணவாட்டிக்கு உரிமை இல்லை மணவாளனைத் தெரிந்துகொள்ள. ஆனால் பிசாசு என்ன செய்தான். பிசாசு, மக்களை தங்களுக்கான தெய்வங்களை தெரிந்து கொள்வதற்கு தூண்டிவிட்டான். நீ தெரிவு செய்துகொள். மதங்கள் அவனால் பிறந்தது. உண்டா? இல்லையா? மனிதன் தெரிவு செய்த காரணத்தால், மதங்கள் வந்து விட்டன. ஆனால், நம்மைத் தெரிவு செய்கிறவர் யார்? இயேசு சொல்கிறார், பரிசுத்த ஆவியானவர் வந்து உங்களை கண்டித்து உணர்த்துவார். பரிசுத்த ஆவியானவர் பரத்திலிருந்து பரிசுகளான, வரங்களை கொடுத்துக்கொண்டே இருக்கிறார். மணவாளன், அவர் ஆயத்தம் ஆகிக்கொண்டே இருக்கிறார்.

இப்போ ஒரு பிரச்சனை இருக்கிறது. இயேசு என்கின்றவர் மனுஷனாக வந்தார். ஒன்று அவர் தேவன், வார்த்தையானவர், தேவன் மனுஷனாய் வந்தபோது அந்த

மனுஷனாய் வந்தவர்தான் நமக்காய் மரித்தார். தேவன் மரிக்கவில்லை. மனுஷனாகிய இயேசுவுக்குத்தான் நானும், நீங்களும் மணவாட்டி. தேவனுக்கு மணவாட்டியாக முடியுமா? நன்னெறியியலில் அது பிழை. அது பிழையான இறையியல். மனுஷகுமாரனுக்குத்தான் நாம் மணவாட்டிகள். அப்படியானால் சபையாகிய மணவாட்டியை வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரத்தில் கல்யாணம் செய்ய வேண்டிய ஆட்டுக்குட்டியானவர் தேவனாகிய இயேசுவா? மனிதனாகிய இயேசுவா? மனதனாகிய இயேசு. அதைத்தான வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்திலிருந்து நாம் பார்த்தால், பரலோகில் இயேசு தேவனாகக் காணப்படாமல் ஆட்டுக்குட்டியானவராகக் காணப்படுகிறார்.

வெளிப்படுத்தின விசேஷத்தை பார்த்தால் முத்திரைகளை உடைப்பதற்கு, சிங்காசனத்திற்கு முன் இயேசு நிற்கிறார். ஆட்டுக்குட்டியானவராக வந்து நிற்கிறார். அந்த நேரத்திலிருந்து வெளிப்படுத்தின் விசேஷம் 19வது அதிகாரம் வரையிலான காலத்தை நீங்கள் அளந்து பார்த்தால் ஏழு வருடங்கள். ஆவர் ஆட்டுக்குட்டியானவராகக் காணப்பட்டு கல்யாணம் தொடங்கும் காலம் வரைக்கும் ஏழு வருடங்கள் என்றால், ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவுக்கு ஏழு கூடுகிறது. இந்த உலகத்தில் 33 வருடங்கள் வாழ்ந்து விட்டுப்போனார். முப்பத்துமூன்றோடு 7ஐக் கூட்டினால் கலாச்சாரத்தின்படி (33 + 7 = 40) 40 வயதில் அவர் சபையை வெளிப்படுத்தின விசேஷம் 19ம் அதிகாரத்தில் கல்யாணம் செய்கிறார்.

நான் வருவதை மனுஷகுமாரனும் அறியார் என்றுதான் சொல்கிறார். என் பிதா தவிர யாரும் அறியமாட்டான். மனுஷகுமாரனும் அறியார். தேவனாகிய இயேசுவுக்கு தெரியாது என்று அவர் சொல்லவில்லை. மனுஷகுமாரனும் அறியார். யூத கலாச்சாரத்திலிருந்து வேதத்தோடு அதை இணைத்துக் காட்ட வேண்டும். இதை சாதாரண பிரசங்கத்தில், பைபிள் ஸ்டடியில் செய்து விளக்க முடியாது.

உன் இனத்தை விடு என்று சொல்லும்போது, உன் கலாச்சாரத்தை முழுக்க அழித்துக்கொள் என்று ஆண்டவர் சொன்னது ஏன்? உனக்குள் நான் என் கலாச்சாரத்தை வைக்கப்போகிறேன். உன் தேசத்தை நீ விட்டுவிடு. ஏன்? என் தேசத்தை உனக்கு கொடுக்கப்போகிறேன். சூப்பர் தேசம் கிடைத்து விட்டது. இஸ்ரவேலைப் போன்று ஒரு தேசம் இல்லை. உன் இனத்தை நீ எடுத்து விடு, அழித்துவிடு, உன் கலாச்சாரத்தை அழித்துவிடு, ஏன்? நான் என் காலாச்சாரத்தை உனக்குத் தரப்போகிறேன்.

ஆபிரகாமுடைய கலாச்சாரம், ஆண்டவருடைய கலாச்சாரம். நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இன்றைக்கு இருக்கிற யூத கலாச்சாரம் அல்ல. வேதத்தில் யூத கலாச்சாரம், அதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். இன்றைக்கு

இருக்கின்ற யூதர்கள் ஊதுகிற விதமாக அன்றைய யூதர்கள் ஊதவில்லை. இன்றைய யூதர்கள் சாப்பிடுகிற விதத்தில் அன்றைய யூதர்கள் செய்யவில்லை. நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. ஆனால் அப்படியே அந்த கலாச்சாரம் இன்றைக்கு இல்லை. யூத கலாச்சாரம், பரலோக கலாச்சாரம் என்று தெரிந்து கொண்டதற்கு இஸ்ரவேலுக்கு சென்று, அங்கு யூதர்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்து பின்பு ஓ! இதுதானா என்று தப்பாய் நினைத்து விடக்கூடாது. ஆகவே பரலோக கலாச்சாரத்தைப் பார்க்க வேண்டுமென்றால், யூத கலாச்சாரத்தைத்தான் நாம் ஆராய வேண்டியது அவசியமாய் இருக்கிறது. எனவே நமது வாழ்க்கையிலும் ஆண்டவர் நம்மை சில நேரங்களில் ஆசீர்வதிப்பதற்கு தடையாய் அமைவது நமது கலாச்சாரம், நமது பழக்கவழக்கம், நமது பழக்க வழக்கங்களிலும் சில காரியங்கள் இல்லையென்றால் நாம் சில ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது.

சில விஷயங்களை விட்டுத்தான் ஆகவேண்டும். அதற்காக நல்ல விஷயங்களை விட்டு, கெட்ட விஷயங்களை இந்த காலத்தில் எடுத்து சந்தோஷம் என்று சொல்லித் திரிகிறார்கள். அது மிகவும் தவறாய் இருக்கிறது. எபிரெய கலாச்சாரம் மிகவும் மகிமையான ஒன்று, இதை ஆண்டவர் படைத்தார், அதை ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்தார். அதைக் கொடுக்க வேண்டிய காரணம் என்ன? உன் இனத்தை விட்டுவிடு, நான் உனக்கு புதிய இனத்தை, கலாச்சாரத்தை தருகிறேன்.

மூன்றாவது: தகப்பன் வீடு - தகப்பன் வீட்டை விட்டு போ, இதையும்தான் நாம் வாசிக்கும்போது நினைக்கிறோம், இந்த வீட்டை ஆண்டவர் ஒரு கோர்வையாய் சொல்லுகிறாராம். இந்த தேசத்தை விட்டு விட்டு போ, இனத்தை விட்டு விட்டு போ, அப்புறம் தகப்பன் வீட்டை விட்டு போ. இதற்கான உள்ளர்த்தம் இருக்கிறது. உன் தகப்பன் வீட்டையும் விட்டு விட்டு போ என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?

ஆபிரகாம் - என்று நாம் சொல்லும்போது, அது இனி தேராகின் குமாரனாகிய ஆபிரகாம் என்று இருக்கக்கூடாது. விளங்குகிறதா? ஒருவருடைய அடையாளமே, ஒருவரது பெயர், தகப்பன், குடும்பம் மற்றும் தகப்பன் பெயர்தான். சரிதானே. அடையாளம் என்பது நான் யார்? பெண்கள் கூட திருமணம் செய்கிறபோது அவர்கள் தகப்பன் பெயரைத்தான் சேர்த்து சொல்கிறார்கள். கல்யாணம் முடிந்த பிறகு திருமதி என்ற இணைப்போடு அவரின் கணவர் பெயர்தான் இருக்கும். விசேஷமாக தகப்பன் பெயர் தெரியவில்லை என்றால் மிகவும் பரிதாபமானது.

தகப்பன் பெயர் தெரியாமல் போனால் அவன் கெட்ட அல்லது தவறான வழியில் பிறந்தவன், அப்படித்தானே, விபச்சாரத்தில் பிறந்தவன், தேவன் என்ன சொல்லுகிறார். இனி தேராகின் மகன் ஆபிரகாம் அல்லா. உனக்கென ஒரு அடையாளம் இல்லை.

பயங்கரம், அதாவது ஒரு நாட்டில் பிரஜையாக இருக்க வேண்டுமென்றால், குடியுரிமைக்குரிய எல்லா டாக்குமெண்ட்ஸ் இருக்கவேண்டும். இல்லையென்றால் அது மிகவும் கொடியதாக இருக்கும். உங்கள் அடையாளமே இல்லாமல் போகிறதே என்றால் என்ன அர்த்தம். அடையாளம் இல்லாமல் போனவனுக்கு என்ன பெயர் தெரியுமா? அனாதை. தகப்பன் இல்லாதவன் - யார்? அனாதை. ஆண்டவர் என்ன சொல்லுகிறார், அனாதையாகு. நன்றாக யோசியுங்கள். நாடற்றவன் ஒரு நாடோடி அல்லது தேசாந்திரி. ஒரு கலாச்சாரம் இல்லாதவன், பழகத்தக்கவன், மதிக்கத்தக்கவன் அல்ல. ஏனென்றால் அவனுக்கு நன்னடத்தை இல்லை. அது இனத்திலிருந்து, பழக்கவழக்கத்திலிருந்து வருகிறது. தமிழனுக்கான நன்னடத்தை – தமிழனிடம், வெள்ளைக்காரனின் நன்னடத்தை - வெள்ளையனிடமும். அவனுடைய நன்னடத்தை நமக்கு பிடிக்கவில்லையானாலும், அவனுக்குப் பிடிக்கிறது. அது அவனுக்கு அங்கு சரி. சரிதானே. நீங்கள் அங்கேபோய் வாழ்ந்தால்தான் அவனை மாதிரி செய்யவேண்டும். அவன் அங்கே இருக்கிறவரைக்கும் அவனுக்கு அது ஓகே.

கலாச்சாரத்தை இல்லாமல் ஆக்கிக்கொள் என்றால், நீ நடத்தை கெட்டவன், நாடற்றவன், நடத்தை கெட்டவன், அனாதை. பாருங்கள் ஆதியாகமம் 12:1 எவ்வளவு பயங்கரம் என்று. நம்ம சும்மா சொல்லிவிட்டு போய்விடுகிறோம். தேசத்தை விட்டு போ என்றார், அவன் போனான். இனத்தை விட்டு போ என்றார், போனான். தேசத்தை விட்டு போ என்றாலே இதுவும் அடங்கிவிடும். ஆண்டவர் ஆபிரகாமுக்கு சொன்னதுபோல யாருக்குமே சொன்னது கிடையாது. அவ்வளவு பயங்கரமானது. நாடற்றவன், நடத்தை கெட்டவன், அனாதை – ஏன்? என் நாட்டை உனக்கு கொடுக்கப் போகிறேன். என் நடத்தையை நான் உனக்கு கற்றுக் கொடுக்கப்போகிறேன். மூன்றாவது உனக்கு தகப்பன் பெயர் தேவையில்லை. உனக்குள் என் வல்லமையை அனுப்பி, என் விசுவாசத்தை உனக்கு அனுப்புவேன். நீயே, தகப்பனாகப் போகிறாய், யாருக்கு? குறைந்தது மூன்று விதமான ஜனங்களுக்கு. 1. உன் சுபாவ சந்ததியாகிய வரப்போகின்ற ஈசாக்கின் வம்சத்துக்கும், இஸ்மவேல் வம்சத்துக்கும். ஆகார்தானே அம்மா. அம்மாதானே மாறிவிட்டது. இருவருக்கும் சுபாவத்தந்தை ஆபிரகாமல்லவா. ஆக இந்த பூமியிலே இரண்டுவித பெரிய ஜனக்கூட்டங்கள் ஆபிரகாமின் சுபாவ சந்ததியாய் இன்றைக்கும் உண்டு. முதலாவது கூட்டம். 2. ஆவிக்குரிய ரீதியில் அத்தனை இஸ்லாமியர்களும், அவன் அரேபியனாக இருக்கட்டும், இஸ்ரவேல் வம்சத்தை சேராதவனாகவும் இருக்கட்டும். தங்களது ஆவிக்குரிய தகப்பனாய் பார்ப்பது. ஆபிரகாமைத்தான் நல்லவனோ, கெட்டவனோ, குண்டுபோடுகிறானோ, இல்லையோ – அவனும் ஆபிரகாமை தகப்பன் என்றுதான் பார்க்கிறான். உலகத்தில் பெரும்பான்மையினராக

இருக்கும் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஆபிரகாமை தங்கள் ஆவிக்குரிய தந்தையாகப் பார்க்கிறார்கள். அந்த வகையில், ஆபிரகாமை தங்கள் தகப்பன் என்று சொல்லுகிறவர்கள் அனைத்து கண்டங்களிலும் உண்டு. அனைத்து தேசங்களிலும் உண்டு, எல்லா இடங்களிலும் உண்டு. தந்தை பெயரை இழந்த அனாதையானவரான ஆபிரகாமை, உலகத்தவனுடைய அனாதை தன்மையைப் போக்க ஆண்டவர் பயன்படுத்தினார். என்ன ஆச்சரியம். இதுதான் ஆபிரகாமுடைய மகத்துவம் இதுதான் அது ஆதியாகமம் 12:1ன் மகத்துவம்.

அதன்படி அன்பானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் கூட தேவன் இழப்புக்களை நமக்கு அனுமதிக்கலாம். குடும்ப வாழ்க்கையில் இருக்கட்டும், ஊழியத்தில் இருக்கட்டும், கவலைப்படவேண்டாம். ஆபிரகாமின் தேவன் உங்கள் தேவன், நம் தேவன். அவர் பெரிய காரியங்களைச் செய்வார். தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து பயன்படுத்துவாராக! ஆமென்.

## கேள்விகள்:

1. இஸ்ரவேல் என்கிற பெயரின் அர்த்தம் என்ன? என்பதனையும் இஸ்ரவேல் பெயருக்கான தீர்க்கதரிசனம் என்ன? என்பதனையும் கூறுக.
2. ஆபிரகாமின் அழைப்பு மற்றும் அவரின் பெயரில் செய்யப்பட்ட திருத்தம் மற்றும் ஆபிரகாமை தேவன் வழிநடத்தின விதங்கள் இவைகளைப் பற்றிக் கூறுக?
3. இஸ்ரவேல் தேசத்தின் சிறப்புகள் என்னென்ன? என்பதனை இப்பாடத்தின் வரலாற்று குறிப்பிலிருந்து கற்றுக்கொண்டதிலிருந்து கூறுக?
4. ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த தேசத்தின் தன்மைகள் என்னென்ன என்பதனை வசனங்களின் அதிகாரங்களோடு விளக்கமாக கூறுக?
5. இஸ்ரவேல் நாடு திரும்ப உருவானது பற்றியும் அந்த சமயத்தில் காணப்பட்ட சூழ்நிலை மற்றும் தேவன் இஸ்ரவேல் நாட்டை ஆசீர்வதித்த விதங்கள் பற்றியும் விளக்கமாக கூறுக?
6. ஆதியாகமம் 12:1 வசனத்தின் விளக்கங்களாக இப்பாடத்திலிருந்து கற்றுக்கொண்டவைகளை விளக்கமாக கூறுக?